# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1
## OS.NO.47/2024

**Name** : Arumugam
**Father/Husband Name** : Parasuraman

**Age** : 75

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.07.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:02.23 p.m**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சொத்து குறித்து அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும். இந்த சொத்து தங்கவேலு, விஸ்வநாதன் மற்றும் ஆறுமுகம்(நான்) ஆகியோர்களுக்கு சொந்தமாகும். தங்கவேலு மற்றும் விஸ்வநாதன் உயிருடன் இல்லை. தங்கவேலுவின் மனைவி இறந்துவிட்டார். ஆண் பிள்ளைகள் இல்லை. 4 பெண் பிள்ளைகள் உள்ளனர. விஜயசாமுண்டீஸ்வரி, வசந்தா, மங்கயைர்க்கரசி மற்றும் வேண்டாபாய் ஆகியோர்கள் பிரதிவாதிகள். அவர்கள் தவிர வேறு யாருக்கு சொந்தம் என்றால் மேற்சொன்ன 3 நபர்களுக்கு தான். விஸ்வாநாதனுக்கு அவருடைய மனைவி பிரேமகுமாரி அவரது அருண்விஸ்வநாதன் ஆகியோர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த வழக்கில் வாதியாக இருக்கிறார்கள். இந்த சொத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவருக்கும் பங்கு உண்டு. அந்த சொத்து ஊசூர் பக்கத்தில் உள்ள ஜபால்புரத்தில் தெள்ளூர் பஞ்சாயத்தில் உள்ளது.

அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் லிஸ்ட் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டா( வா.சா.ஆ 3) என் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.

தங்கவேலு பெயரில் உள்ளது. வா.சா.ஆ. 1 விஸ்வநாதன் பெயரில் உள்ளது. இதெல்லாம் 1986 வருட பட்டாக்கள். மொத்தம் 6 ஏக்கர் 54 சென்ட். அதில் வீடு தனியாக உள்ளது. அந்த வீட்டின் விஸ்திரம் 60 x 16. அந்த வீட்டிற்கு குடிநீர் வரி என் பெயரில் உள்ளது. தண்ணீர் இந்த வருடத்திற்கு தான்போட்டுள்ளேன். 2022-2023 க்கான ரசீது ஆறுமுகமாகிய என் பெயரில் உள்ளது. இதற்கு முன் வரி யார் பெயரில் இருந்தது என்றால் வரியே இல்லை. இதற்கு முன்பு ஜானகிராமன் மற்றும் மங்கயர்க்கரசி பெயரில் தான் ரசீது வரும் என்றால் இல்லை. 2023 ல் வரி கட்டியுள்ளேன். வழக்கு போடுவதற்கு 1 வருடத்திற்கு முன்பு தான் 2022-2023 க்கான வரி கட்டியுள்ளேன். வழக்கு போடுவதற்காக தான் அவ்வாறு கட்டினேன் என்றாலும் அதற்கு முன்பு ஜானகிராமன் மற்றும் மங்கயர்க்கரசி பெயரில் வருகிறது என்று சொன்னால் சரியல்ல அவர் இருக்கும் வரை அவரே கட்டிக்கொண்டார. அதன் பிறகு கேப் இருந்தது.

என்னிடம் காட்டப்படும் ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் 2007 ல் தங்கவேலு பெயரில் வருகிறது. (ஜெராக்ஸ் நகலை காட்டி கேள்வி கேட்டதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). வீட்டின் மின்சார வரி என் அப்பா பரசுராமன் பெயரில் வருகிறது, சமீபத்தில் யார் பெயரில் வருகிறது என்று தெரியாது. பட்டா எண்.765 ல் உரிமையளார்கள் பரசுராமன், விஜயா, வசந்தா, தங்கவேலு, விஸ்வநாதன், ஆறுமுகம், மங்கயர்க்கரசி மற்றும் வேண்டாபாய் ஆகியோர் பெயரில் வருகிறது என்றால் அறிவிப்பு அனுப்பிய பிறகு 28.08.2023 ல் போய் மாற்றி கொண்டார்கள். பட்டா எண். 2684 அதன் உரிமையாளராக தங்கவேலு, விஜயா, வசந்தா, மங்கயர்க்கரசி மற்றும் வேண்டாபாய் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் எல்லாமே 2023 க்கு பிறகு தான் மாற்றப்பட்டது.

பட்டா எண். 924 ல் கிணறு மற்றும் நிலத்திற்கு அனைத்திற்கும் மணி மகன் சுரேந்தர், அறுமுகம் மகன் சசிகுமார், மணி மகன் குமரவேல், கந்தசாமி மகன் கமலக்கண்ணன், தங்கவேலு மகள்வசந்தா, தங்கவேலு மகள் வேண்டாபாய், தங்கவேலு மகள் மங்கயர்க்கரசி, கண்ணன் மகன் சண்முகநாதன்

பெயரில் தான் உள்ளது என்றால் கூட்டு கிணறு எனவே எல்லோர்பெயரும் வரும். பட்டா 913 ல் அர்ஜூன நாயக்கர் மகன் சின்னய்யா, சொக்கலிங்க மகன் தர்மலிங்கம், சொக்கலிங்க மகன் ராம மூர்த்தி, அர்ஜூன நாயக்கர் மகன் கோவிந்தசாமி, பரசுராமன் முதலியார் மகன் ஆறுமுகம், பரசுராமன் முதலியார் மகன் விஸ்வநாதன், சொக்கலிங்க மகன் சந்தரசேகர பிள்ளை, தர்மலிங்கம் மகன் ஆறுமுகம், தங்கவேலு மகள் விஜயா, தங்கவேலு மகள் மங்கயர்க்கரசி, தங்கவேலு மகள் வேண்டாபாய், தங்கவேலு மகள் வசந்தா ஆகியோர் பெயர் வருகிறது என்றால் அது கூட்டு கிணறு பாத்தியம் வரும். இந்த வழக்கில் உள்ள சொத்தின் மேல் Additional District Munsif நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாமலேயே தாக்கல் செய்துவிட்டார்கள். நான் வேண்டாம் என்று சொன்னேன் ஆனாலும் அவர்கள் அண்ணனின் இறப்பு சான்று பெற்று வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள். அந்த வழக்கு வீடு சம்மந்தப்பட்டது. வீடு சம்மந்தப்பட்டது வழக்கில் என் அண்ணன் வழக்கு செய்துவதற்கு ஆட்சேபணை இல்லை என்று சான்று கொடுத்தோம்., அவர் இறந்த பிறகு இறப்பு சான்று பெற்று எனக்கு தெரியாமல் வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள். அந்த வழக்கை பற்றி ஏன் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் இந்த வழக்கு நிலம் சம்மந்தப்பட்டது என்பதாலும் அந்த வழக்கு வீடு சம்மந்தப்பட்டது என்பதால் சொல்லவில்லை. அசல் வழக்கு OS NO. 240/2003 Additional District Munsif நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு மேல் appeal முதன்மை சார்பு நீதிமன்றத்தில் AS No. 13/2023 என்று தாக்கல் செய்யப்பட்டு அது முடிந்த அதன் மீது மேல்முறையீடு வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றாலும் அந்த வழக்கு குறித்து எந்த பிராதுவும் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான், சம்மந்தம் இல்லை என்பதால் நான் சொல்லவில்லை. அந்த வழக்கு வீட்டின் சந்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு நடத்த வேண்டாம் என்று என் அண்ணனிடம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

**(Sd/Tmt.G.Santhi)**
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.